**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாரூர்**

**2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12ம் நாள் வியாழக்கிழமை**

**O.S. 37/2023**

வாதி தரப்பு சாட்சியாகிய PW1–ன் வாக்குமூலம் (1969 –ம் ஆண்டின் 44 –வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. S. முஹம்மது பாசில், M.Sc., B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : வீரைய்யன் | தாலுக்கா | : திருவாரூர் |
| த/பெ | : ராமசாமி | கிராமம் | : காப்பணாமங்கலம் |
| ஜாதி | : | தொழில் | : சத்துணவு அமைப்பாளர் (ஓய்வு) |
| சமயம் | : | வயது | : 75/26 |

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் நான் சொல்லி வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டதாகும். அதில் கண்டுள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

கடந்த 15.08.2011ம் தேதிய என் தகப்பனார் இறப்பு சான்றிதழ் அசல் **வா.சா.ஆ.1,** ஆகவும்

கடந்த 09.08.2011 ம் தேதிய என் தாயார் இறப்பு சான்றிதழ் அசல் **வா.சா.ஆ.2,** ஆகவும்

கடந்த 12.10.2011ம் தேதிய என் தகப்பனார் மற்றும் தாயார் வரிசுரிமை சான்றிதழ் அசல் **வா.சா.ஆ.3,** ஆகவும்

கடந்த 24.05.2021ம் தேதிய தாவா சொத்திற்கான பட்டா சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.4,** ஆகவும்

கடந்த 09.03.2021ம் தேதிய தாவா சொத்திற்கான சிட்டா சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.5,** ஆகவும்

கடந்த 24.06.2022 தேதியில் நான் குடவாசல் காவல்நிலையத்தில் பதிவு தபால் மூலம் அனுப்பிய புகாரினை காவல் ஆய்வாளர் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை **வா.சா.ஆ.6,** ஆகவும்

எனது ஆதார் அடையாள அட்டை நகல் அசலுடன் ஒப்பிடப்பட்டது **வா.சா.ஆ.7,** ஆகவும்

கடந்த 09.09.2022 அன்று குடவாசல் சார்பதிவாளர் வழங்கிய தாவா சொத்திற்கான வழிகாட்டு மதிப்பீடு கடிதம் அசல் **வா.சா.ஆ.8,** ஆகவும்

கடந்த 05.08.1972அன்று என் தகப்பனாருக்கு வழங்கப்பட்ட குடியிருப்பு ஒப்படைப்பு பத்திரம் அசல் **வா.சா.ஆ.9,** ஆகவும்

கடந்த 16.04.2022ம் தேதியிட்ட பிரதிவாதிக்கு நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் **வா.சா.ஆ.10,** ஆகவும்

கடந்த 16.04.2022 அன்று என் வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதி பெற்றுகொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை அசல் **வா.சா.ஆ.11,** ஆகவும்

இவ்வழக்கு இ.ம.எண்.356/2023 ல் நீதிமன்ற ஆணையரால் தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்ற ஆணையர் அறிக்கை **நீ.சா.ஆ.1,** ஆகவும் குறியீடு செய்தும் தாவாப்படி தீர்ப்பாகவேண்டுகிறேன்.

(பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுக்கோளிற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

//மேற்படியார் தரப்பில் இன்றைய விசாரணையின்போது **நீ.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.11 ---** வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது.//

MOHAMED BASIL S

Digitally signed by MOHAMED BASIL S
Date: 2026.03.12 18:34:09 +0530